10.11.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 43 /2021

அ.சா.17

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காத்தவராயன் | | |
| த/பெ | நாகப்பன் | | |
| கிராமம் | பள்ளிப்புதுப்பட்டு | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 40 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் புதுவை மாநிலம் கல்மண்டபத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன எங்கள் ஊரைச் சேர்ந்த ராஜ்கிரன் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகள் கஸ்தூரி, கலாவைத் தெரியும். ஆஜர் மற்றொரு எதிரியைத் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எந்த எதிரியையாவது தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு அ.சா.7 சுகுமாரைத் தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. எங்கள் ஊரைச் சேர்ந்த ராஜ்கிரன் இருக்கிறாரா என்றால் இல்லை. அவர் எப்படி இறந்தார் என்றால் தெரியாது. அவர் பிரேதம் பள்ளியனேலியனூர் இரயில்வே நிலையம் அருகே கிடந்ததாக கேள்விப்பட்டேன். அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரித்தார்களா என்றால் இல்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

கடந்த 13.04.2019 ம் தேதி அதிகாலை 03.30 மணியளவில் நானும் என் ஊரைச் சேர்ந்த சாமிக்கண்ணு மகன் சுகுமார் என்பவரும், மணக்குள விநாயகர் மருத்துவமனைக்கு சென்று ஒருவரை பார்த்துவிட்டு திரும்ப வீட்டிற்கு வந்துகொண்டிருந்தோம் என்றும், அப்போது பள்ளியனேலியனூர் இரயில்வே டிராக் அருகில் உள்ள வாட்டர் கம்பெனி அருகில் ராஜ்கிரனின் மோட்டார் சைக்கிள் எண். PY 01 AB 1622 Honda unicorn ல் வளவனூரைச் சேர்ந்த தீபக்ராஜ்ம் மற்றொருவரும் பாயில் எதையோ சுருட்டி நடுவில் வைத்துக்கொண்டு வேகமாக சென்றார்கள் என்றும், ஏன் இவ்வளவு வேகமாக போகிறார்கள் என்று நாங்கள் பேசிக்கொண்டு வந்தோம் என்றும், பின்னிட்டு காலை 06.00 மணியளவில் ராஜ்கிரன் பள்ளியனேலியனூர் இரயில்வே டிராக்கில் தலை மற்றும் கைகால்களில் காயம் பட்டு இறந்து கிடப்பதாக சொன்னார்கள் என்றும், நாங்கள் சென்று ராஜ்கிரனின் பிரேதத்தை பார்த்தோம் என்றும், பிறகு 03.30 மணியளவில் நாங்கள் பார்த்தது ராஜ்கிரனை கோடாலியால் வெட்டி பிரேதத்தை பாயில் சுருட்டி எடுத்துச் சென்று இரயில்வே டிராக்கில் போட்டுள்ளார்கள் என்பது தீபக்ராஜ்ம், கஸ்தூரியும் ஆழியூர் கிராம நிர்வாக அலுவலரிடம் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள் என்று கேள்விப்பட்டேன் என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு உண்மையை மறைத்து பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை**